**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 40/2025**

Prosecution Witness : **PW6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **Dr. பூமிநாதன்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluk** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி ரஞ்சித் (எ) காமராஜ், 2ம் எதிரி பிரபாகரன், 3ம் எதிரி ரியாஷ்கான், 4ம் எதிரி ராஜேஷ், 5ம் எதிரி கருப்பண்ணன், 6ம் எதிரி ராஜேந்திரன், 7ம் எதிரி பழனியப்பன், 8 ஆம் எதிரி சக்திவேல், 9ம் எதிரி துரைசாமி, 10ம் எதிரி மகேந்திரன், 11ம் எதிரி தியாகராஜன், 12ம் எதிரி மணிவேல், 13ம் எதிரி முருகேசன், 14ம் எதிரி முத்துசாமி, 15ம் எதிரி பரமசிவம், 16ம் எதிரி வேல்முருகன், 17ம் எதிரி மகேஷ்வரன், 18ம் எதிரி பொன்னடி, 19ம் எதிரி ராஜ்குமார், 20ம் எதிரி விவேகானந்தன், 21ம் எதிரி சேகர், 22ம் எதிரி வேம்படி, 23ம் எதிரி குருநாதன் 24ம் எதிரி பொன்னம்பலம், 25ம் எதிரி செல்வராசு 26ம் எதிரி ரமேஷ், 27ம் எதிரி ரத்தினகிரி, 28ம் எதிரி தமிழ்செல்வன், 29ம் எதிரி பானு, 30ம் எதிரி திலகவதி, 31ம் எதிரி ராஜாத்தி, 32ம் எதிரி ராணி, 33ம் எதிரி சிறும்பாய், 34ம் எதிரி மகாலிங்கம், 35ம் எதிரி சங்கர், 36ம் எதிரி பாலசுப்ரமணியன், 37ம் எதிரி பாலசுப்ரமணியன், 38ம் எதிரி பரமேஸ்வரன், 39ம் எதிரி காமராஜ் செந்தில்குமார், 40ம் எதிரி ராஜேஸ்வரி, 41ம் எதிரி கதிர்வேல் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குளித்தலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.04.2020 ஆம் தேதி சுமார் 21.00 மணியளவில் மேற்சொன்ன மருத்துவமனையில் பணியிலிருந்த போது அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு சேர்ந்த மனோகரன், த/பெ. மதியழகன், அன்பழகன், த/பெ.வீரமலை, பானுமதி, க/பெ.சஞ்சீவி, சதிஷ்குமார், த/பெ.மணிவண்ணன், ராஜ்குமார், த/பெ.மலையாளி ஆகியோரை சிகிச்சைக்காக அனுமதித்து அதில் மனோகரனை மட்டும் மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துமவனைக்கு அனுப்பி வைத்து அங்கிருந்து பெறப்பட்ட அறிக்கையினை பெற்று மனோகரனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்று வழங்கியுள்ளேன். **நான் மனோகரன், அன்ப வழங்கிய காயச்சான்று இது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்பழகன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்று வழங்கியுள்ளேன். நான் அன்பழகனுக்கு வழங்கிய காயச்சான்று இதுதான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.03.07 20:07:20 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 40/2025**

Prosecution Witness : **PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாஸ்கரன் | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி ரஞ்சித் (எ) காமராஜ், 2ம் எதிரி பிரபாகரன், 3ம் எதிரி ரியாஷ்கான், 4ம் எதிரி ராஜேஷ், 5ம் எதிரி கருப்பண்ணன், 6ம் எதிரி ராஜேந்திரன், 7ம் எதிரி பழனியப்பன்,** 8 ஆம் எதிரி சக்திவேல், 9ம் எதிரி துரைசாமி, 10ம் எதிரி மகேந்திரன், 11ம் எதிரி தியாகராஜன், 12ம் எதிரி மணிவேல், 13ம் எதிரி முருகேசன், 14ம் எதிரி முத்துசாமி, 15ம் எதிரி பரமசிவம், 16ம் எதிரி வேல்முருகன், 17ம் எதிரி மகேஷ்வரன், 18ம் எதிரி பொன்னடி, 19ம் எதிரி ராஜ்குமார், 20ம் எதிரி விவேகானந்தன், 21ம் எதிரி சேகர், 22ம் எதிரி வேம்படி, 23ம் எதிரி குருநாதன் 24ம் எதிரி பொன்னம்பலம், 25ம் எதிரி செல்வராசு 26ம் எதிரி ரமேஷ், 27ம் எதிரி ரத்தினகிரி, 28ம் எதிரி தமிழ்செல்வன், 29ம் எதிரி பானு, 30ம் எதிரி திலகவதி, 31ம் எதிரி ராஜாத்தி, 32ம் எதிரி ராணி, 33ம் எதிரி சிறும்பாய், 34ம் எதிரி மகாலிங்கம், 35ம் எதிரி சங்கர், 36ம் எதிரி பாலு பாலசுப்ரமணியன், 37ம் எதிரி பாலசுப்ரமணியன், 38ம் எதிரி பரமேஸ்வரன், 39ம் எதிரி காமராஜ் செந்தில்குமார், 40ம் எதிரி ராஜேஸ்வரி, 41ம் எதிரி கதிர்வேல் ஆகியோர் **இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஒய்வு பெற்றுள்ளேன். கடந்த 2018 ஆம் ஆண்டு குளித்தலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். குளித்தலை காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் என்பவர் மனோகரன் என்பவரிடமிருந்து வாய்மொழியாக புகாரை பெற்று குளித்தலை காவல்நிலைய குற்ற எண்.178/2018, ச.பி. 147, 148, 341, 294 பி, 323, 324, 307 இ.த.ச. வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். **மனோகரனிடமிருந்து பெறப்பட்ட புகார் இது தான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் செந்தில்குமார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் தற்போது இறந்துவிட்டார். இந்த வழக்கினை புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.ராஜ்மோகன் தற்போது பணிமாறுதல் செய்யப்பட்டு லால்குடியில் காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார். எனக்கு ராஜ்மோகனின் கையொப்பம், கையெபழுத்து நன்கு பறிட்சையம் மேலும் வழக்கு கோப்புகளை பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.04.2018 ஆம் தேதி காலை 6.00 மணியளவில் வழக்குகோப்பை ஆய்வாளர் திரு.ராஜ்மோகன், தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான எழுநூற்றுமங்கலம் ஒத்தைவேல் அருகில் சென்று வழக்கின் சம்பவ இட சாட்சிகள் செல்வம், ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **ஆய்வாளர் திரு.ராஜ்மோகன் தயார் செய்த பார்வை மகஜர் இது தான். அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் திரு.ராஜ்மோகன் தயார் செய்த மாதிரி வரைபடம் இதுதான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சாட்சிகள் மனோகரன், ராஜபாண்டி,

தேவா, அன்பழகன், பழனி, தமிழரசன், சுமதி, சத்தியராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து குவிமுச 161 வாக்குமுலம் பதிவு செய்துள்ளார். 06.04.2018 ஆம் தேதியன்று சாட்சிகளை விசாரித்து சம்பவம் உண்மை எனத்தெரியவந்ததால் ஆய்வாளர் ராஜ்மோகன் எதிரிகளை தேடிச்சென்று எதிரிகள் ரஞ்சித், பிரபாகரன், ரியாஷ்கான், ராஜேஷ், கருப்பண்ணன், சண்முகம், ராஜேந்திரன், பழனியப்பன், சக்திவேல், துரைசாமி ஆகியோரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். மேலும் 19.04.2018 ஆம் தேதி குற்றப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். **ஆய்வாளர் ராஜ்மோகன் தயார் செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரிகள் இளவரசன், மதுரைவீரன், சிங்காரம், தனபால் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் மேற்கண்ட நான்கு எதிரிகளையும் நீக்கிவிட்டு எதிரிகள் நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **அந்த எதிரிகள் நீக்கல் அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் ராஜ்மோகன் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் நான் பொறுப்பேற்று மேற்சொன்ன சாட்சிகளை தனித்தனியாக விசாரித்தபோது ஆய்வாளர் ராஜ்மோகன் குவிமுச 161 வாக்குமூலத்தில் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் மேற்கொண்டு வாக்குமுலம் பதிவு செய்யவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது வரைபடமும் சரியாக இருந்ததால் மேற்கொண்டு வரைபடமும் பார்வை மகஜரும் தயார் செய்யவில்லை. நான் மருத்துவர் பூமிநாதனை விசாரித்து வழக்கில் காயமடைந்த மனோகரன் மற்றும் அன்பழகன் ஆகியோருக்கு காயச்சான்றிதழ் பெற்று மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 29.10.2018 ஆம் தேதியன்று என்னுடைய புலன் விசாரணை முடித்து ஆஜராகியுள் எதிரிகள் மீதும் ச.பி. 147, 148, 294 பி, 307

இ.த.ச. உ/இ 34 இ.த.ச. ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சிகள் அ.சா.1 மனோகரன், அ.சா.2 ராஜபாண்டியன், அ.சா.3 அன்பழகன், அ.சா.4 பசுபதி, அ.சா.5 சத்தியராஜ் ஆகியோர்கள் ஆய்வாளர் ராஜ்மோகனிடம் சொன்னதைத்தான் என்னிடமும் சொன்னார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.2 ல் மனோகரின் விபத்து பதிவேட்டில் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாகத்தான் மற்றும் அ.சா.ஆ.3 ல் அன்பழகன் விபத்து பதிவேட்டில் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாகத்தான் கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் சரிவர புலன்விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிகள் 35 பேர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனோகரன், அன்பழகன் ஆகிய இருவரும் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றும் 4 பேர் தாக்கியதாக மருத்துவரிடமும் உங்களிடமும் தவறாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:07:27 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.